**முதியோருக்கான தேசிய சபை**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனையிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய. 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியுள்ளது. எனவும் இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர முதியோருக்கான தேசிய சபை 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளின் நிதிசார் விளைவுகளையும் காசுப்பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகிறேன்.

### 1.2 நிதிக்கூற்று தொடர்பான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்குகள் சமர்ப்பித்தல்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளுக்கான நிர்வாக சபையின் அங்கீகாரம் சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் அக் கணக்குகள் கணக்காளரினால் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நியம இல. 24

2008 ஏப்ரல் 17 ஆம் திகதி திறைசேரியில் இருந்து விடுவிக்கப்பட்ட ரூபா 1,800,000 பெறுமதியான வாகனப் பெறுமதியும் ரூபா 1,165,700

பெறுமதியான சொத்துக்கள் என்பன அரசாங்க மானியம் (மூலதனம்) கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நியம இல. 03

------------------------

கடந்த ஆண்டுகளின் போது தவறாகப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டுக் கொள்கை மீளாய்வாண்டின் போது சீராக்கப்பட்டதன் காரணமாக திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட ரூபா 1,717,181 தொகையும் பெறுமானத் தேய்விற்கான ஏற்பாட்டுத் தொகையான ரூபா 813,402 தொகையும் கட்டிட அறை ஒதுக்கங்களிற்கு செலவுவைக்கப்பட்ட ரூபா 903,779 தொகை தொடர்பாக ஏற்பட்ட கொள்கை மாற்றங்கள் கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் குறிப்பின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது முதியோருக்கான இல்லங்களைப் பழுதுபார்ப்பதற்காக மீகஸ்தன்ன முதியோர் இல்லத்திற்கும் பலாங்கொடை புனித ஜோசப் முதியோர் இல்லத்திற்கும் வழங்கப்பட்ட தொகையில் எஞ்சியிருந்த ரூபா 259,764 தொகை மீள அனுப்பி வைக்கப்படாதமையால் நிதிக்கூற்றுக்களில் அந் நிறுவகங்களில் இருந்து பெற வேண்டிய பணமாக கணக்கிடப்படாது மீண்டெழும் மற்றும் பேணல் செலவினமாக கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 318,490 பெறுமதியான நுகர்வுப் பொருட்கள் மரத்தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்களின் கீழும் ரூபா 26,887 பெறுமதியான நுகர்வுப் பொருட்கள் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழும் கணக்கிடப்பட்டிருந்தன.

**1.2.4 சட்டங்கள், விதிகள். பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு | சபையின் ஊழியர்களுக்கு பணிக்கொடைக் கொடுப்பனவிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 1978 டிசெம்பர் 19 ஆம் திகதிய 842ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிசார் மீளாய்வு**

**2.1.1 நிதிசார் விளைவு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபை நடவடிக்கைகளின் நிதிசார் விளைவு ரூபா 948,294 ஆன மிகையாக இருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 16,161,187 ஆகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டிற்கான நிதிசார் விளைவுகளுடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டிற்காக ரூபா 17,109,481 தொகையான அதிகரிப்புக் காணப்பட்டது.அரசாங்க மானியத் தொகை ரூபா 17,759,000 ஆலும் நானாவித வருமானத் தொகை ரூபா 274,758 ஆலும்

அதிகரித்திருந்தமையும் ஒப்பந்தச் சேவை செலவினம் ரூபா 467,537 ஆலும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 4,139,513 ஆலும் குறைவடைந்தமை இவ்வதிகரிப்பிறக்கு காரணமாகியிருந்தன.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 செயலாற்றல்

2010 ஆம் ஆண்டின் போது முதியோருக்கான தேசிய சபையின் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட முதியோர் குழுக்களை அமைத்தல், பகல் நேர பராமரிப்பு நிலையங்களுக்காக நிதியுதவி வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தல், மருத்துவ நிலையத்தை ஏற்பாடு செய்தல் மூக்குக் கண்ணாடி வழங்குதல் மற்றும் செவிப்புல உபகரணங்களை வழங்கல் ஆகிய செயற்பாடுகள் ஐந்து தொடர்பாக எதிர்பார்க்கப்பட்ட இலக்கு எய்தப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 உள்ளகக் கணக்காய்வு

உரிய அமைச்சில் ஈடுபடுத்தப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் உள்ளகக் கணக்காய்வு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டில் மதிப்பீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 8% முதல் 100% வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஆ) நிதிக்கூற்றுக்கள் தயாரித்ததும் சமர்ப்பித்தலும்

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) நிலையான சொத்துக்கள்